CIVIL SOCIETY COLLECTIVE FOR COVID-19 RESPONSE

உடனடி வெளியீட்டிற்காக

1 ஜுலை 2021

# தடுப்பூசி செலுத்துவதில் அனைவருக்கும் சமத்துவம்: அனைவரும் பாதுகாப்பாக இல்லையென்றால் யாருமே பாதுகாப்பாக இல்லை

**தடுப்பூசி செலுத்துவதில் அனைவருக்கும் சமத்துவத்திற்கு உதவுவதற்காகச் சர்வதேச சமுதாயத்தின் ஆதரவினைப் பெறக் கொவிட் 19 பதிற்செயற்பாட்டுக்கான சிவில் சமூகக் கூட்டு அழைப்பு விடுக்கின்றது**.

தடுப்பூசி செலுத்துவதில் அனைவருக்கும் சமத்துவத்தினை முன்னுரிமைப்படுத்துமாறு கொவிட் 19 பதிற்செயற்பாட்டுக்கான சிவில் சமூகக் கூட்டு அனைத்து நாடுகளையும் வேண்டுகின்றது. செயற்திறன்மிக்க தடுப்பூசியேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தினை முகாமைத்துவம் செய்வதற்காக மிகையாகத் தடுப்பூசிகளையும் ஏனைய வளங்களையும் கொண்டுள்ள நாடுகள் உலகம் முழுவதும் தடுப்பூசிகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டுமெனச் சிவில் சமூகக் கூட்டு அழைப்பு விடுக்கின்றது – **தடுப்பூசி செலுத்துவதில் அனைவருக்கும் சமத்துவம், அனைவரும் பாதுகாப்பாக இல்லையென்றால் யாருமே பாதுகாப்பாக இல்லை** எனும் செய்தியினை வலியுறுத்திக் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதங்களில் சிவில் சமூகக் கூட்டு இந்தக் கரிசணையினை வெளிப்படுத்தியுள்ளது. அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா, பிரான்ஸ், ஜேர்மனி, பங்களாதேஷ், இத்தாலி, ஜப்பான், மலேசியா, நெதர்லாந்து, நோர்வே, பாகிஸ்தான், ரொமானியா, ரஷ்யா, சுவிட்சர்லாந்து, சீனா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தூதரகங்களுக்கும் ஐரோப்பிய யூனியனின் தூதுக்குழுவுக்கும் ஐக்கிய நாடுகள் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வதிவிடப் பிரதிநிதிகளுக்கும் சிவில் சமூகக் கூட்டு இந்தச் செய்தியினை எடுத்துக்கூறியுள்ளது.

“அறிவியலினால் தேவைப்படுத்தப்படும் விதத்தில் மக்களுக்குத் தடுப்பூசியேற்றுவதற்கு மருந்துகளைக் கிடைக்கச் செய்வதற்கான” தேவையினைக் கூட்டு வலியுறுத்துகின்றது. “விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல் சங்கிலிகளைப் பரவலாக்கி இறுக்கமான உரிமமளிக்கும் சட்டங்களாலும் உற்பத்தி உரிமைப் பாதுகாப்புக்களாலும் தடைப்படாது தடுப்பூசியினை உற்பத்தி செய்வதற்கு அதிக நாடுகளை இயலுமாக்குமாறு கூட்டு அழைப்பு விடுக்கின்றது. இது முன்னெப்பொழுதும் நிகழ்ந்திராத ஓர் உலகளாவிய நெருக்கடியாகும் – சுரண்டல் மேற்கொள்வதற்கு இது ஒரு வர்த்தக வாய்ப்பல்ல.”

*The Civil Society Collective for COVID-19 Response is a collective of civil society organisations that have come together to contribute to the national COVID response efforts. The CSO collective primarily focusses on supporting most vulnerable groups affected by the pandemic with emergency food and hygiene materials. It also advocates on issues that affect these vulnerable groups during the pandemic. The CSO collective consists of 25 district representatives and 15 core group members at the national level coordinating the response of participating CSOs throughout the country. For any details you may contact csocollectivesl@gmail.com*

சுகாதாரத்திற்கான அடிப்படை மனித உரிமையினை இயலுமாக்குவது "தடுப்பூசியேற்றல் ராஜதந்திரத்தினுள்" அகப்பட்டுவிடக் கூடாது என்பதையும் உபாயமார்க்கமிகு பூகோள அரசியல் பேரங்களுக்கு அது உட்பட்டுவிடக் கூடாது என்பதையும் கூட்டு வலியுறுத்தியுள்ளது. சர்வதேச சமுதாயம் பாரிய அளவிலான தடுப்பூசியேற்றலுக்குக் கடப்பாடு பூணவேண்டும் என்பதுடன் பெரியம்மை மற்றும் போலியோ போன்ற நோய்களின் போது நன்மதிப்புப் பெறும் வகையில் நடந்துகொண்டது போல் அதன் முயற்சிகளை ஒன்றுகுவிக்கவேண்டும்.

உலகளாவிய பெருந்தொற்று பதிற்செயற்பாட்டின் மீதுள்ள புலமைச் சொத்துக் கட்டுப்பாடுகளுக்கு மறுசீராக்கல்களுடனான கட்டமைப்புச் சார்ந்த மாற்றத்திற்கு இந்த முயற்சி அழைப்பு விடுப்பதுடன் உலகளாவிய ரீதியில் தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தின் பரந்த அடிப்படையிலான பாவனையினையும் வளப் பகிர்வினையும் ஊக்குவிக்கின்றது. தடுப்பூசிக் கொடைகள் மூலமான வெளிநாட்டு அபிவிருத்தி உதவி வரவேற்கப்படுகின்றது மேலும் இதுவே குறுகிய காலத்தில் அதிகம் தேவைப்படுகின்றது. ஆனால் பெருந்தொற்றுக்கான ஒரு பதிற்செயற்பாட்டுப் பொறிமுறையாக இது நீண்ட காலத்தில் போதாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

தடுப்பூசி செலுத்துவதில் அனைவருக்கும் சமத்துவம் என்பது நாடுகளினுள்ளும் சமத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்றது. இலங்கையில் தடுப்பூசியேற்றலில் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதையும் முன்களப் பணியாளர்களை விலைகொடுத்துச் செல்வாக்கும் அதிகாரமும் மிக்கவர்களுக்குச் சிறப்புரிமை வழங்கப்படும் எண்ணற்ற சந்தர்ப்பங்களையும் சிவில் சமூகக் கூட்டு கோடிட்டுக்காட்டுகின்றது. வெளிப்படைத்தன்மையுடைய திட்டம் இன்றியும் போதிய தொடர்பாடல் இன்றியும் நம்பத்தகுந்த செயன்முறையின்றியும் தடுப்பூசியேற்றல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைச் சிவில் சமூகக் கூட்டு அவதானித்துள்ளது. இருதரப்பு ரீதியாக அல்லது உலகளாவிய பொறிமுறை மூலமாக இலங்கையில் தடுப்பூசியேற்றலுக்குச் சர்வதேச சமுதாயம் பங்களிப்பு வழங்குகின்ற காரணத்தினால், இலங்கை அரசாங்கத்துடனான கலந்துரையாடல்களின் போது இந்தக் கரிசணைகளை எழுப்புமாறு சம்பந்தப்பட்ட நாடுகளை சிவில் சமூகக் கூட்டு வேண்டுவதுடன் அரசாங்கம் சர்வதேச சமுதாயத்திடம் இருந்து தேவைப்படுத்தும் வெளிப்படைத்தன்மை மற்றும் சமத்துவக் கோட்பாடுகளுக்கு அதனை இயைபுறுமாறும் வேண்டுகின்றது.

தடுப்பூசிகளின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், தேவை (சுகாதாரத் துறையின் முன்களப் பணியாளர்கள், அத்தியாவசிய சேவைகள் மற்றும் இணை நோய்களைக் கொண்டவர்கள் ஆகியோரை முன்னுரிமைப்படுத்தல்), வெளிப்படைத்தன்மை மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் கோட்பாடுகளின் அடிப்படையில் தடுப்பூசி ஏற்றுவதை இலங்கை பின்பற்றவேண்டும். வெளிப்படைத்தன்மை மிக்கதும் அறிவியல் ரீதியிலானதுமான தடுப்பூசியேற்றல் திட்டத்தினை இலங்கை அரசாங்கம் பின்பற்றுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு யுனிசெப் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற ஐநா

முகவர்கள் உலகளாவிய தடுப்பூசியேற்றல் நன்கொடைகளை வசதிப்படுத்தவேண்டும் எனச் சிவில் சமூகக் கூட்டு எதிர்பார்க்கின்றது.

இலங்கையில் வாழ்வாதாரங்களின் மீது பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினையும் சிவில் சமூகக் கூட்டுக் கோடிட்டுக்காட்டுவதுடன் வறிய மற்றும் பாதிப்புறுநிலையிலுள்ள குடும்பங்களுக்கு இலக்குவைக்கப்பட்ட உணவு நிவாரண உதவியினை வழங்குவதைக் கருத்தில்கொள்ளுமாறு வெளிநாடுகளையும் நிறுவனங்களையும் வேண்டுகின்றது.

கொவிட் 19 பதிற்செயற்பாட்டுக்கான சிவில் சமூகக் கூட்டானது சிவில் சமூக நிறுவனங்களின் கூட்டாகும் என்பதுடன் இந்தச் சிவில் சமூக நிறுவனங்கள் தேசிய கொவிட் பதிற்செயற்பாட்டு முயற்சிகளுக்கு உதவுவதற்காக ஒன்றுசேர்ந்துள்ளன. பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள மிகவும் பாதிப்புறுநிலையில் உள்ள குழுக்களுக்கு அவசர உணவு மற்றும் சுகாதாரப் பொருட்கள் கொண்டு உதவி வழங்குவதில் சிவில் சமூகக் கூட்டு அடிப்படையில் கவனம் குவிக்கின்றது. பெருந்தொற்றின் போது பாதிப்புறுநிலையிலுள்ள இக்குழுக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் சிவில் சமூகக் கூட்டு ஆதரித்து வாதாடுகின்றது. நாடு முழுவதும் பங்குபற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் பதிற்செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் 25 மாவட்டப் பிரதிநிதிகளையும் 15 பிரதான குழு உறுப்பினர்களையும் சிவில் சமூகக் கூட்டு தேசிய மட்டத்தில் கொண்டுள்ளது.

*The Civil Society Collective for COVID-19 Response is a collective of civil society organisations that have come together to contribute to the national COVID response efforts. The CSO collective primarily focusses on supporting most vulnerable groups affected by the pandemic with emergency food and hygiene materials. It also advocates on issues that affect these vulnerable groups during the pandemic. The CSO collective consists of 25 district representatives and 15 core group members at the national level coordinating the response of participating CSOs throughout the country. For any details you may contact csocollectivesl@gmail.com*